சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்,

திருவாரூர் - 610 001

தேதி: 20.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 11/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | அமல்தாஸ் |
| தந்தை பெயர் | : | பன்னீர்செல்வம் |
| கிராமம் | : | கும்பகோணம் |
| தாலுக்கா | : | கும்பகோணம் |
| தொழில் | : | ஓய்வு உதவி ஆய்வாளர்,<br>காவல் துறை |
| வயது | : | 59 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றுள்ளேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். நான் கடந்த 2023 ஆம் வருடம் குடவாசல் காவல்

நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 03.06.2023 ஆம் தேதி நாரணமங்கலம் ஆற்றங்கரை தெருவை சேர்ந்த செல்வராஜ் மகன் அ.சா-1 தியாகராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி அ.சா.ஆ-1 ஆன புகார் கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் காவல் நிலைய குற்ற எண். 282/2023 இ.த.ச பிரிவுகள் 294 (பி), 506 (2), உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) SC/ST (PoA) Act-ன் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு கோப்பினை நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் பார்வைக்கு முன்னிலை படுத்தினேன். மேற்படி வழக்கு சம்மந்தமாக நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள். விவரம் சொன்னேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

புகாரில் அ.சா-1 தியாகராஜன் தனது எந்த கைபேசி எண்ணில் இருந்து எதிரியின் எந்த கைபேசி எண்ணிற்கு போன் செய்து ரூ.1000/- பணம் கேட்டார் என்றும், கைபேசி எண்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்கண்டவாறு பணம் கேட்டு போனில் பேசிய போது காலவாய்க்கு கல் அறுத்த பணம் சம்மந்தமாக கேட்டதாக இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தனியாருக்கு சொந்தமானதா என்றால் தனியாருக்கு சொந்தமானது தான். அ.சா.ஆ-1 ஆன புகாரில் அ.சா-1 -யை தவிர வேறு யாரும் இருந்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ-1 ஆன புகாரை எழுதியது யார் என்றால் எனக்கு தெரியாது. என் முன்பாக எழுதப்படவில்லை. 19.05.2023 ஆம் தேதி நடந்ததாக சொல்லப்படும் குற்றம் தொடர்பாக காவல் நிலையத்தில் அ.சா.ஆ-1 ஆன புகார் 03.06.2023 ஆம் தேதி கொடுக்கப்படும் போது கால தாமதமாக புகார் கொடுக்கப்படுவதற்கான காரணம் என்ன என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரியவில்லை. அ.சா.ஆ-5-ஆன முதல் தகவல் அறிக்கையில் வரிசை 14-ல் புகார் தாரரின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ-1 புகாரில் அ.சா1 தனக்கு பயம் ஏற்பட்டதாகவோ, கிளி ஏற்பட்டதாகவோ அல்லது தனது

மானத்திற்கு பங்கம் ஏற்பட்டதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திற்கும் தஞ்சாவூர் PCR நீதிமன்றத்திற்கும் உள்ள தூரம் எவ்வளவு என்றால் சுமார் 65 கிலோமீட்டர் இருக்கும். வாகனத்தில் சென்றால் 2 மணி நேரத்தில் நீதிமன்றத்திற்கு சென்றுவிடலாம். அ.சா.ஆ-5 நீதிமன்றத்தை அடைந்த நாள் 06.06.2023 ஆம் தேதி என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன நாள், நேரம், இடத்தில் அ.சா.ஆ-1 ஆகிய புகார் என்னிடம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதுபோல் முதல் விசாரணையில் சொன்ன விதமாக நாள், நேரத்தில் அ.சா.ஆ-5 அச்சிட்ட முதல் தகவல் அறிக்கை என்னால் தயார் செய்யப்படவில்லை. அதுபோல் நீதிமன்றத்திற்க்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ-5 அச்சிட்ட முதல் தகவல அறிக்கையை தட்டச்சு செய்த காவலர் பெயர் என்ன என்றால் நியாபகம் இல்லை. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.20 18:32:39 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.